## *சுவிசேஷத்துவம்*

*"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர் களாக்குவேன்" (மாற். 1:17). இந்த வார்த்தைகளினால் இயேசு அர்த்தப்படுத்தியது என்ன? பிழைப்புக்காக மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள்; இப்பொழுது அவர்கள் மனிதரைப் பிடிப்பவர்களாவார்கள்! மாற்கு 1:17க்கு இணை வசனமான லூக்கா 5:10 இதை மிகத் தெளிவாகக் கொண்டு வருகின்றது: "பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனா யிருப்பாய்."*

*" 'பிடிக்க' என்பதற்கு லூக்கா பயன்படுத்தும் வார்த்தையானது zogreo என்ற கிரேக்க வேர்ச் சொல்லில் இருந்து வருகின்றது, இது உயிருடன் எடுத்தல் அல்லது உயிர் வாழப் பிடிபடுதல் என்ற நேரடி அர்த்தமுள்ளது ஆகும்."*

*டெலாஸ் மைல்ஸ்*
*சுவிசேஷத்துவத்தின் திறன் மிகு கொள்கைகள்*

*"இந்த ஆண்டில் சென்றடைந்த நபர்களின் எண்ணிக்கை 97 மற்றும் 98 என்பவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு மதிப்பிட முடியாத ஒரு ஆத்துமாவாகும்! அடையப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 15 மற்றும் 16 என்பவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு என்பது, ஒரு பிரிந்த இல்லமாகவோ, ஒருவரின் தந்தைக்குக் கிறிஸ்துவும் கிறிஸ்தவ ஐக்கியமும் தேவைப் படுவதாகவோ அல்லது ஆவிக்குரிய முன்னோடித்துவத்தில் வலிவானது முன்னேற்றமடையாமற்போன ஒரு இளைஞராகவோ இருக்கலாம்."*

*சார்லஸ் லிவிங்ஸ்டோன்*
*மக்களைச் சென்றடைய ஞாயிறு வேதாகமப் பள்ளியைப் பயன்படுத்துதல்*

*"கிறிஸ்தவர்களாகிய நாம் மற்ற நபர்களுக்குக் கடன்பட்டுள்ள முதல் ஊழியம் அவர்/அவள் கூறுவதைக் கவனித்தல் என்பதே ஆகும்."*

*டயட்ரிச் பொனோஃபர்*
*ஒன்று கூடி வாழ்தல்*

# பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது?

I. படைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தவை எவை?
   1. தேவன் ________________ ம் ________________ ம் படைத்தார். ஆதி. 1:1
   2. தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது ________________. ஆதி. 1:31

II. ஏதேன் தோட்டத்தின் நடுவில் இருந்தது என்ன?
   1. (ஏதேன்) தோட்டத்தின் நடுவில் ________________ மற்றும் ________________ அறியத்தக்க மரமும் மற்றும் ________________ மரமும் இருந்தன. ஆதி. 2:9
   2. அவர்கள் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசித்தால் அவர்கள் ________________. ஆதி. 2:17

III. ஏதேன் தோட்டத்தில் ஏவாள் எவ்விதம் சோதிக்கப்பட்டாள்?
   1. பாம்பு, "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல மரங்களின் கனியையும் ________________ வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?" என்றது. ஆதி. 3:1
   2. (நன்மை தீமே அறியத்தக்க மரத்தின் கனியை) புசித்தால், தான் ________________ என்பதை ஏவாள் அறிந்திருந்தாள். ஆதி. 3:3
   3. பாம்பு பின்வருமாறு கூறிற்று: அ. ________________ ஆதி. 3:4
      ஆ. ________________ ஆதி. 3:5
      இ. ________________ ஆதி. 3:5
   4. அந்தக் கனியின் தன்மைகளாக ஏவாள் கண்டவை:
      அ. ________________ ஆதி. 3:6
      ஆ. ________________ ஆதி. 3:6
      இ. ________________ ஆதி. 3:6

IV. நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசித்ததால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
   1. அவர்கள் இருவருடைய கண்களும் ________________. ஆதி. 3:7
   2. பாம்பு தன் ________________ நகர்ந்து செல்லும். ஆதி. 3:14
   3. பெண் கர்ப்பவதியாயிருக்கையில்/பிள்ளை பெறுகையில் ________________ அடைவாள் மற்றும் ஆண் அவளை ________________. ஆதி. 3:16
   4. பூமி ________________. ஆதி. 3:17 மற்றும் மனித குலம் ________________ த் திரும்பும். ஆதி. 3:19
   5. தேவன், "மனிதன் ________________, ________________ அறியத் தக்கவனாய் ________________ ஒருவரைப் போல ஆனான்"

*என்று உரைத்தார். ஆதி. 3:22*

V. *பிள்ளைகள் நன்மை தீமை அறிந்தவர்களாய் இவ்வுலகில் பிறக்கின்றார்களா?*

1. *பிள்ளைகளிடம் நன்மை தீமை அறியும் அறிவு ______________. உபா. 1:39*
2. *பிள்ளைகள் தீமையை __________________ ம் நன்மையை அறிந்திருப்பதில்லை. ஏசா. 7:16*
3. *ஒருவர் பார்வையற்றவராயிருந்தால் அவருக்குப் ______________ யோவா. 9:41*

VI. *பிள்ளைகள் பாவிகளாய்ப் பிறந்து பரலோக இராஜ்யத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளார்களா?*

1. *மகன், __________________________ அக்கிரமத்தைச் சுமப்பதில்லை. எசே. 18:20*
2. *மனுஷனுடைய ______________________ அவனுக்குள் உண்டாக்குகிற கர்த்தர் (சக. 12:1) ஆவிகளின் __________________________ இருக்கிறார். எபி. 12:9. (பிர. 12:7ஐயும்காணவும்.)*
3. *பரலோக இராஜ்யம் சிறு __________________________ ப் போன்றவர்களுடையதாக இருக்கின்றது. மத். 19:14*

Copyright 1992 - Gospel Light Pub. Co. Delight, AR 71940




கண்கள் திறக்கப்பட்டன
தேவனைப்போல் - நன்மை தீமை அறிதல்

*பின் வருபவற்றால் பிள்ளைகள் பாவிகளாயிருக்கிறார்களா?*

1. *சொந்த செயல்கள்? இல்லை*
2. *உடல் மூலமாக, பெற்றோர்களால்? இல்லை*
3. *ஆவி மூலமாக, தேவனால்? இல்லை*

*பாடத் தாளை எடுத்துரைத்தல்:*

# "பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது?"

*"பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது?"* என்ற இந்தப் பாடத் தாளானது தொடர்ந்து வரும் படிப்புகளுக்கு அடிப்படையை அமைப்பதால் நல்லதொரு தொடக்கப் பாடமாக இருக்க முடியும்.

### நோக்கம்

ஆதாம், ஏவாள் ஆகியோரின் *பாவத்தின் விளைவாக,* இவ்வுலகில் பாவமும், உடல் ரீதியான மரணமும் நுழைந்திருப்பினும், அவர்கள் பாவத்தினால் உண்டான குற்றமானது தொடர்ந்து வந்த தலைமுறை யினரிடம் பகிரப்படவில்லை என்பதைக் காண்பிப்பதே "பாவம் மற்றும் மரணம்" என்ற பாடத் தாளின் நோக்கமாக உள்ளது. தேவனுடைய நல்ல படைப்பானது ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் பாவத்தினால் கறைப்பட்டது.

### பாடச் சுருக்கம்

சுருக்கமாய்க் கூறினால், இந்தப்பாடம் தேவன் எல்லாவற்றையும் நல்லதாகவே படைத்தார். ஆனால் பாவத்தின் காரணமாக அவர் தமது நற்படைப்பின் மீது ஒரு சாபத்தை வைத்தார் என்று காண்பிக்கின்றது. ஆதாம், ஏவாள் ஆகியோரின் பாவத்தின் காரணமாக, பாவமும் நன்மை தீமை அறியும் அறிவும் இந்த உலகில் நுழைந்தது. ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் பாவத்தினால் பச்சிளம் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர் என்றாலும், ஆதாம் ஏவாளின் பாவத்தினால் அக்குழந்தைகள் குற்றமுள்ள வர்களாகப் பிறப்பதில்லை.

---

### அறிமுகம்

[இந்தப்பாடத்திற்குக் கற்பவரைத் தயார் செய்வதில் ஆசிரியர் அவர் (கற்பவர்) வேதாகமத்தை எவ்வளவு அறிந்துள்ளார் என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள விரும்பலாம். ஒரு நல்ல ஆரம்பம் என்பது பின்வருமாறு இருக்கலாம் (பின்வரும் கருத்தானது ஆசிரியர் ஒரு பாடத்தை எடுத்துரைக்

கையில் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே கூற வேண்டிய எடுத்துரைப்பாக உள்ளது):]

நான் உங்களின் அறிவுக் கூர்மையை அவமானப்படுத்த விரும்பவில்லை, ஆனால் நான் மிகவும் எளிமையான தகுதி நிலையிலிருந்து தொடங்க விரும்புகின்றேன், இதனால் நீங்கள் வேதாகமத்தின் இயல்பு மற்றும் அதன் கட்டமைப்பு பற்றிய உங்கள் புரிந்து கொள்ளுதலில் எந்த நிலையில் இருக்கின்றீர்கள் என்பதை நான் புரிந்து கொள்ள முடியும். வேதாகமம் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்களா? அவை யாவை?

இவ்விரண்டில் எது அதிகமான பாடங்களைக் கொண்டுள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா? பழைய ஏற்பாடா அல்லது புதிய ஏற்பாடா? [எது அதிகமான பாடங்களைக் கொண்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு, புதிய ஏற்பாடு தொடங்கும் இடத்தில் வேதாகமத்தை விரித்து வைத்து, இரண்டு ஏற்பாடுகளின் அளவுக்கு இடையில் உள்ள ஒப்பீட்டைக் காண்பியுங்கள்.]

வேதாகமம் என்பது பல்வேறு எழுத்தாளர்கள் எழுதியவற்றின் தொகுப்பாக உள்ளது. முழு வேதாகமத்தில் 66 புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன. பழைய ஏற்பாடு 39 புத்தகங்களைக் கொண்டுள்ளது, மற்றும் புதிய ஏற்பாடு 27 புத்தகங்களைக் கொண்டுள்ளது.

வேதாகமத்தின் புத்தகங்கள் அவற்றின் அளவில், 2 யோவான் நிருபம் போல ஒரு பக்கத்திலிருந்து, சங்கீதம் புத்தகத்தைப் போல பல பக்கங்கள் வரையிலும் வேறுபடுகின்றன. ஒவ்வொரு புத்தகமும் அதிகாரங்களாகவும் (அத்தியாயங்கள்), ஒவ்வொரு அத்தியாயமும் வசனங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டில் 4 பெரும் பிரிவுகள் உள்ளன: நியாயப்பிரமாணப் புத்தகங்கள் 5, வரலாற்றுப் புத்தகங்கள் 12, ஞானம் மற்றும் ஆராதனையின் புத்தகங்கள் (or) கவிதைப் புத்தகங்கள் 5 மற்றும் தீர்க்கதரிசனப் புத்தகங்கள் 17, இவை சில வேளைகளில் பெரிய தீர்க்கதரிசிகள் 5 என்றும் சிறிய தீர்க்கதரிசிகள் 12 என்றும் அந்தப் புத்தகங்களின் பாடங்களின் அளவின் அடிப்படையில் அவ்வாறு அழைக்கப்படுகின்றன. பெரிய தீர்க்கதரிசிகள் சிறிய தீர்க்கதரிசிகளை விட அதிகமானவைகளை எழுதியுள்ளனர்.

புதிய ஏற்பாட்டிலும் கூட 4 பெரும் பிரிவுகள் உள்ளன: இயேசுவின் வாழ்வு மற்றும் போதனைப் பற்றி 4 புத்தகங்கள், வரலாற்றுப் புத்தகம் 1, நிருபங்கள் 21 (இது சில வேளைகளில் பவுலின் நிருபங்கள் 13 மற்றும் பொது நிருபங்கள் 8 என்றும் பிரிக்கப்படுகின்றன), மற்றும் தீர்க்கதரிசனப் புத்தகம் 1.

இந்தப் பாடத்தில் நாம் வேதாகமத்தின் தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்கப் போகின்றோம் மற்றும் நாம் “பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது?” என்பது பற்றிய பாடத்தாள் (பக்கம் 149யைப் பார்க்கவும்) பற்றி ஆழ்ந்து சிந்திப்பதன் மூலம் படைப்பில் இருந்து தொடங்கப் போகின்றோம்.

## I. *படைப்பு*

*1. படைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தவை எவை? ஆதியிலே தேவன் எவற்றைப் படைத்தார்?* [கற்பவர் *ஆதி. 1:1*ஐ வாசிக்கட்டும்.] *தேவன் எதைப் படைத்தார்?* [கற்பவர் பதில் அளிக்கட்டும். கோடிட்ட இடங்களை ''வானத்தையும்'' மற்றும் ''பூமியையும்'' என்ற வார்த்தைகளினால் நிரப்பவும்.]

*2. தேவன், தாம் படைத்தவைகள் எப்படியிருந்ததாகக் கண்டார்?* [கற்பவர் ஆதி. *1:31*ஐ வாசிக்கட்டும்.] *தேவனுடைய படைப்பு எப்படியிருந்தது?* [கற்பவர் பதில் அளிக்கட்டும், கோடிட்ட இடத்தை "நன்றாயிருந்தது" என்ற வார்த்தையினால் நிரப்பவும்.]

*தேவன் படைத்திராத ஏதொன்றும் இருக்கின்றதா? தேவன் படைத்த எல்லாம் நன்றாயிருந்ததா? தேவன் எல்லாவற்றையுமே நன்றாகவே படைத்தார் என்றால், இப்பொழுது எல்லாமுமே நன்றாக இராதது ஏன்? இதைப் பற்றி தான் இப்பாடத்தின் பிற்பகுதியில் நாம் ஆராய்வோம்.*

## II. **ஏதேன் தோட்டத்தில்**

*1. நாம் இப்பொழுது ஏதேன் தோட்டத்தைப் பற்றிச் சிந்திக்கப் போகின்றோம். ஏதேன் தோட்டத்தின் நடுவில் இருந்தது என்ன?* [கற்பவர் *ஆதி. 2:9*ஐ வாசிக்கட்டும்.] *தோட்டத்தின் நடுவில் இரு வகையான மரங்கள் இருந்தனவா? தோட்டத்தின் நடுவில் இருந்த மரங்களுக்குக் கொடுக்கப் பட்ட பெயர்கள் என்ன?* [கோடிட்ட இடங்களை "நன்மை" மற்றும் "தீமை" மற்றும் "ஜீவன் தரும்" என்ற வார்த்தைகளைக் கொண்டு நிரப்பவும்.]

[பாடத்தாளின் *பின்புறத்தைத் திருப்பி* இரண்டு மரங்களை வரைந்து அவைகளுக்கு "நன்மை தீமை அறியும் மரம்" மற்றும் "ஜீவன் தரும் மரம்" என்று பெயரிடவும். உங்கள் வரைபடம் எவ்விதம் இருக்க வேண்டும் என்பதை அறிய இவ்வழிகாட்டி நூலில் இப்பாடத்திற்கான வரைபடத்தை பக்கம் 148ல் கவனிக்கவும். இரண்டு மரங்களை மாத்திரம் வரைய வேண்டும் மற்றும் ஆதாம் ஏவாள் ஆகியோரின் தலைகளைப் பெரியதாகவும், ஒவ்வொரு கண்ணுக்கும் ஒரு கோட்டை மட்டும் வரையவும். பாடத்தாளின் பின்புறத்தில் மற்றவைகளை வரைவதற்கு அதிகம் கருத்து அளிக்கும் இப்பாடத்தின் பிற்பகுதி வரையிலும் காத்திருங்கள்.]

*வேதாகமத்தின் பெயர்கள் தனிச்சிறப்புடையவைகளாய் இருக்கின் றன. அவைகள் "ஜீவன் தரும் மரம்" என்றும் "நன்மை தீமை அறியத்தக்க மரம்'' என்றும் அழைக்கப்பட்டது ஏன்? ஆதாமும், ஏவாளும் அந்த மரங்களின் கனிகளைப் புசித்தால் அவைகளின் பெயரில் உள்ள "ஜீவன்" மற்றும் "நன்மை தீமை பற்றிய அறிவு" ஆகியவற்றைப் பெறுவார்கள் என்பதால் அம்மரங்கள் அப்பெயர்களைக் கொண்டிருந்தன என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?*

*2. அவர்கள், நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் புசித்தால் என்ன நடக்கும் என்று தேவன் கூறினார்?* [கற்பவர் ஆதி. *2:17*ஐ வாசிக்கட்டும்] *நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை உண்டால் அவர்களுக்கு என்ன நடக்கும்?* [''சாவார்கள்'' என்ற வார்த்தையைக்

*கோடிட்ட இடத்தில் நிரப்பவும்.]*

*இப்பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? நாம் செய்கின்ற ஒவ்வொன்றிற்கும் நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய நிலையில் தேவன் நம்மை வைத்துள்ளார் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். நாம் செய்கின்ற ஒவ்வொன்றும் நம்மை உடல்ரீதியாகவோ, உணர்வு ரீதியாகவோ, மனதளவிலோ, சமூகத்தளவிலோ, ஒழுக்க ரீதியிலோ, அல்லது ஆவிக்குரிய வகையிலோ ஏதாவதொரு வழியில் பாதிக்கின்றது. மரங்களிலிருந்து அவர்கள் உண்டால் அவர்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கும்.*

## III. சோதிக்கப்படுதல்

*1. நன்மை தீமை அறியத் தக்க மரத்தின் கனியைப் புசிக்கும்படி ஏவாள் சோதிக்கப்பட்டதைப் பற்றி நாம் இப்பொழுது ஆலோசித்துப் பார்ப்போம். பாம்பு அவளை எவ்விதம் சோதித்தது? [கற்பவர் ஆதி. 3:1ஐ வாசிக்கட்டும்.] அவளைச் சோதிப்பதற்கு அவன் (சாத்தான்) கூறியது என்ன? [கோடிட்ட இடத்தில் "புசிக்க" என்று எழுதி நிரப்பவும்.] இது ஏவாளைச் சோதிக்கக் காரணமானது ஏன்? ஒருவேளை இது, தேவன் கூறியிருந்தவற்றின் மீது ஏவாள் கேள்வி கேட்கக் காரணமாயிற்றா?*

*2. அந்த மரத்தின் கனியைப் புசித்தால் தனக்கு மரணம் ஏற்படும் என்று ஏவாள் அறிந்திருந்தாளா? [கற்பவர் ஆதி. 3:3ஐ வாசிக்கட்டும்.] அந்த மரத்தின் கனியைப் புசித்தால் என்ன நடக்கும் என்று தேவன் கூறியிருந்ததாக ஏவாள் சொன்னது என்ன? [கோடிட்ட இடத்தில் "சாவோம்" என்று எழுதி நிரப்பவும்.]*

*3. பாம்பின் பதில் என்னவாக இருந்தது? [கற்பவர் ஆதி. 3:4, 5ஐ வாசிக்கட்டும்.] எந்த ஒரு விஷயம் நடக்காது என்றும், எந்த இரு விஷயங்கள் நடக்கும் என்றும் பாம்பு கூறிற்று? [கோடிட்ட இடங்களில் பின்வருமாறு எழுதி நிரப்பவும்: அ. "நீங்கள் சாகவே சாவதில்லை"; ஆ. "உங்கள் கண்கள் திறக்கப்படும்"; இ. "நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல இருப்பீர்கள்."]*

*பாம்பு கூறிய இந்த மூன்று கூற்றுக்களில் எது பொய் மற்றும் எது உண்மையாய் இருந்தன? அவர்கள் சாவார்களா? அவர்கள் சாவார்கள் என்று தேவன் கூறியுள்ளார் என்பதை நாம் ஏற்கனவே கற்றுள்ளோம். எனவே இது உண்மையான கூற்றாக உள்ளது. ஆனால், கண்கள் திறக்கப்படும் மற்றும் நன்மை தீமை அறிவார்கள் என்ற கூற்றுக்களைப் பற்றிய விஷயம் என்ன? இந்தக் கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா? இவைகளைப் பற்றி இப்பாடத்தின் பிற்பகுதியில் நாம் கற்றறிவோம்.*

*4. அந்தக் கனியைக் குறித்து ஏவாள் கண்டது என்ன? [கற்பவர் ஆதி. 3:6ஐ வாசிக்கட்டும்.] அந்த மரத்தின் கனியைக் குறித்து ஏவாள் கண்ட மூன்று விஷயங்கள் யாவை? [கோடிட்ட இடங்களில் பின்வருமாறு எழுதி நிரப்பவும்: அ. "புசிப்புக்கு நல்லது;" ஆ. "பார்வைக்கு இன்பமானது;" இ. "புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத் தக்கது."] அந்த மரத்தின் நன்மை அல்லது தீமை பற்றி ஏவாள் கவனம் செலுத்தினாளா? அந்த*

*மரத்தின் தீமையான செயல்விளைவு பற்றிக் கவனம் செலுத்தத் தவறியது தான் அவள் வஞ்சிக்கப்படக் காரணமாயிற்றா?*

*மரத்தின் கனியைப் பற்றி ஏவாள் விரும்பிய யாவையும் 1 யோவான் 2:16ல் குறிப்பிடப்பட்டுள்ள உலகத் தொடர்பான விஷயங்களே என்பதைக் கவனியுங்கள். உலகத்தின் கவர்ச்சிகரமான அதே விஷயங்களில் நாம் பாவம் செய்யும்படி சோதிக்கப்படுவதால் நம்மையும் அவளுடன் அடையாளப் படுத்த முடியும்.*

*நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் புசித்தால் மரணம் ஏற்படும் என்பதை அறிந்திருந்தும் கூட, ஏவாள் அக்கனியைப் புசித்தாள். நாமும் கூட நாம் செய்கின்ற செயல் பாவமென்று அறிந்திருந்தும் கூட, அப்படிப்பட்ட பல செயல்களைச் செய்கின்றோம். ஒருவேளை இந்தக் காரணத்தினாலேயே நாம் ஏவாள் செய்ததைக் குறித்து அவளிடம் அதிகம் இரக்கமற்றவர்களாய் உணர்வு பெற்றிருக்கக் கூடாது.*

## IV. விளைவுகள்

*1. நன்மை மற்றும் தீமை ஆகியவற்றை அறியும் அறிவைப் பெறும் மரத்தின் கனியை உண்டதால் ஏற்பட்ட விளைவுகளை நாம் இப்பொழுது ஆலோசனை செய்யப் போகின்றோம். ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் கண்களுக்கு என்னவாயிற்று?* [கற்பவர் ஆதி. 3:7ஐ வாசிக்கட்டும்.] *அவர்களின் கண்களுக்கு என்ன செய்யப்பட்டது?* [கோடிட்ட இடத்தில் "திறக்கப்பட்டன" என்ற வார்த்தையை நிரப்பவும். தாளின் *பின்புறம்* உள்ள படத்தில் ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் கண்களைத் திறப்பது போலப் படம் வரையவும்.]

*இது அவர்கள் அந்த வேளை வரைக்கும் தங்கள் கண்களை மூடிக் கொண்டு தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தனர் என்று அர்த்தப் படுத்துகின்றதா? இது அவர்களின் கண்கள் ஒழுக்கவுணர்வுக்கு, அதாவது நன்மை தீமையை அறியும் அறிவுக்கு மூடப்பட்டிருந்ததாகவும், அக்கனியை உண்ட செயலானது நன்மையையும் தீமையையும் அறியும்படி அவர்களின் கண்களைத் திறந்ததாகவும் அர்த்தப்படுத்துவதில்லையா? அவர்கள் அந்தக் கனியை உண்ணும் முன்பு நன்மை மற்றும் தீமை பற்றிய அறிவு இல்லாததினால் அவர்கள் நன்மை தீமையைப் பற்றிக் கவலை கொள்ளத் தேவையில்லாதிருந்தது, ஆனால் அவர்களின் கண்கள் திறக்கப்பட்ட பொழுது, தாங்கள் நிர்வாணமாய் இருந்ததை உணர்ந்தார்கள். அவர்கள் ஒழுக்க உணர்வு கொண்ட மனச் சான்றைப் பெற்றார்கள்.*

*2. பாம்பு எவ்விதம் தண்டிக்கப்பட்டது?* [ஆதி. 3:14ஐ வாசியுங்கள்.] *இப்பொழுது முதல் அது எதினால் நகரும்?* [கோடிட்ட இடத்தில் "வயிற்றினால்" என்று எழுதி நிரப்புங்கள்.]

*3. பெண் எவ்விதம் தண்டிக்கப்படுவாள்?* [ஆதி. 3:16ஐ வாசியுங்கள்.] *குழந்தையைப் பெறும் பொழுது அவளுக்கு எது அதிகமாகும் மற்றும் மனிதன் அவள் மீது என்ன அதிகாரத்தைப் பெறுவான்?* [கோடிட்ட இடங்களில் "வேதனை" மற்றும் "ஆண்டு கொள்வான்" என்று எழுதி நிரப்பவும்.]

*4.* தேவன் பூமிக்கு *என்ன செய்தார்?* [ஆதி. *3:17* வாசிக்கவும், மற்றும் கோடிட்ட இடத்தில் “சபிக்கப்பட்டிருக்கும்” என்று எழுதி நிரப்பவும்.] மற்றும் தேவன் வேறு எந்தத் *தண்டனையை* ஆதாமுக்கு வாக்களித்தார்? [ஆதி. *3:19*ஐ வாசிக்கவும்] ஆதாம் *எங்கு* திரும்புவான்? [கோடிட்ட இடத்தில் “பூமிக்கு” என்று எழுதி நிரப்பவும்.]

*5.* மரத்தின் கனியை உண்ட செயல் ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் இயல்பைக் கெடுத்துப் போட்டதா? [ஆதி. *3:22*ஐ வாசிக்கவும்.] மனிதன் *யாரைப்* போலானான் என்று தேவன் கூறினார்? [கோடிட்ட இடங்களில் ‘‘நன்மை தீமை அறியத் தக்கவனாய்,’’ ‘‘நம்மில்’’ என்ற வார்த்தைகளை எழுதி நிரப்பவும்.] மனிதன் *எவ்வகையில்* தேவனைப் போல ஆனான்? [நன்மை *தீமை* அறியத்தக்க வகையில். பாடத்தாளின் *பின்புறத்தில்* ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கீழே “கண்கள் திறக்கப்பட்டன” என்று எழுதவும். மேலும் “நன்மை தீமை அறிவதில் தேவனைப் போல் ஆனார்கள்” என்றும் எழுதவும்.]

நன்மை தீமை அறியும் அறிவைப் பெறுதல் என்பது ஆதாம் ஏவாளின் இயல்பைக் கெடுத்துப் போட்டது என்று அர்த்தப்படுமேயானால், இது தேவன் கெட்டுப் போன இயல்புடையவராய் இருக்கின்றார் என்று அர்த்தப்படும், ஏனென்றால் தேவன் நன்மை தீமை அறியும் அறிவுடைய வராய் இருக்கின்றார்.

நன்மை தீமை அறியும் அறிவைக் கொண்டிருத்தல் என்பது நன்மைக்கும் தீமைக்கும் வேறுபாடு காணும் திறமையை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும், இந்த அறிவானது மனிதன் இப்பொழுது ஒழுக்க ரீதியான தேர்வைச் செய்ய வேண்டிய இக்கட்டான நிலையை எதிர்கொள்ள வேண்டும் என்று அர்த்தப்படுத்துகின்றது.

இப்பொழுது மனிதகுலம் தீமையைச் செய்யும்படி சோதிக்கப்பட முடியும். இதற்கு முன்பு, அவர்கள் ஒழுக்க ரீதியான தேர்ந்து கொள்ளு தலைக் குறித்துக் கவலைப்படத் தேவையற்றிருந்தது, ஏனென்றால் அவர்கள் நன்மை தீமை பற்றிய அறிவு இல்லாதிருந்தார்கள். இப்பொழுது அவர்கள் தவறான தேர்ந்து கொள்ளுதல்களை ஏற்படுத்த முடியும், மற்றும் அப்படிப்பட்ட தவறான தேர்ந்து கொள்ளுதல்கள் பாவம் நிறைந்த தேர்ந்து கொள்ளுதல்களாயிருக்கும். அந்த மரத்தின் கனியை அவர்கள் உண்ணும் முன்பு, அவர்கள் நன்மை தீமை பற்றிய அறிவுடையவர்களாய் இல்லாது இருந்தார்கள், மற்றும் இந்தக் காரணத்தினால் அவர்கள் பாவம் நிறைந்த தேர்ந்து கொள்ளுதல்களைச் செய்ய முடியாதிருந்தது.

## V. *பிள்ளைகள் நன்மை தீமையை அறிகின்றார்களா?*

*1.* பிள்ளைகள் இவ்வுலகில் பிறக்கும் பொழுது, *அவர்கள்* நன்மை தீமையை *அறிகின்றார்களா?* [உபா. *1:39*ஐ வாசிக்கவும். கோடிட்ட இடத்தில் “இல்லை” என்று எழுதி நிரப்பவும்.]

*2.* அவர்களிடம் நன்மை தீமையை அறியும் அறிவு இல்லாததால், ஒழுக்க ரீதியான தேர்ந்து கொள்ளுதல்களை எவ்விதம் மேற்கொள்வது என்று அவர்கள் அறிந்துள்ளார்களா? [ஏசா. *7:16*ஐ வாசிக்கவும்.] அவர்கள்

*எப்படிச் செய்வதென்று அறியாதுள்ளவைகள் யாவை?* [கோடிட்ட இடங்களில் "வெறுக்கவும்" மற்றும் "தெரிந்து கொள்ளவும்" என்று எழுதி *நிரப்பவும்.*]

*3.* நன்மைக்கும் தீமைக்கும் இடையில் ஒன்றைத் தேர்ந்து கொள்ள *ஒருவர் அறியாதிருந்தால், அவர் பாவம் செய்ய முடியுமா?* [யோவா. *9:41*ஐ வாசிக்கவும்.] ஒருவர் *பார்வையற்றவராய் இருந்தால், அவரிடத்தில் என்ன இல்லை?* [கோடிட்ட இடத்தில் "பாவமில்லை" என்று எழுதி நிரப்பவும்.]

*''பார்வையற்றவர்''* என்பதன் மூலம் இயேசு *எதனை அர்த்தப் படுத்துகின்றார்? அவர் உடல் ரீதியான பார்வையற்ற தன்மை பற்றிப் பேசுகின்றாரா? "பார்வையற்றவர்" என்பதன் மூலம் அவர் காண முடியாத நிலை அதாவது புரிந்து கொள்ள முடியாத நிலை பற்றி அர்த்தப் படுத்துவதில்லையா? புரிந்து கொள்ள முடியாத நபர் கணக்கு ஒப்புவிக்கத் தேவையில்லை என்று அவர் போதிப்பதில்லையா? மற்றும் இந்தக் காரணத்தினால் அவர் தேவனுக்கு முன்பாகப் பாவியென்று கருதப் படுவதில்லை என்று இயேசு போதிப்பதில்லையா? சிறுபிள்ளைகள் இந்தப் பிரிவில் அடங்குவதில்லையா?*

## VI. ***பிள்ளைகள் பாவிகளாய்ப் பிறக்கின்றார்களா?***

*1.* நன்மை தீமை *அறியாதவர்களாய்* மற்றும் பாவம் செய்ய *முடியாத வர்களாய்ச் சிறுவர்கள் இருக்கின்ற போது, அவர்கள் பெற்றோர்களி டமிருந்து பாவத்தைச் சுதந்தரித்து இவ்வுலகில் பாவிகளாய்ப் பிறப்பது என்பது சாத்தியமாகுமா? ஒரு மகன்/மகள் தனது தந்தையின்/தாயின் பாவத்தைச் சுமப்பதுண்டா?* [எசே. *18:20*ஐ வாசிக்கவும்.] *மகன் யாருடைய பாவத்தைச் சுமப்பதில்லை?* [கோடிட்ட இடத்தில் "தந்தையின்" என்று எழுதி நிரப்பவும்.] *இவ்வசனம், ஒவ்வொரு நபரும் தனது பெற்றோரின் பாவத்தைக் குறித்தல்ல, ஆனால் தனது சொந்தப் பாவத்தைக் குறித்தே தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று போதிப்பதில்லையா?*

*விளைவு* மற்றும் *குற்றம்* ஆகிய இரண்டிற்கும் இடையில் வேறுபாடு ஒன்றை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் பாவத்தின் *விளைவாக* நாம் யாவருமே இறந்து போவோம். இருப்பினும், இது அவர்களின் பாவத்தின் காரணமாக நாம் *குற்றமுள்ளவர்களாகி*, பாவிகளாகக் கருதப்படுகின்றோம் என்று அர்த்தப் படுத்தவதில்லை. ஒரு மனிதன் தனது பிள்ளைகளை மிருகத்தனமாய் அடித்து இறக்கச் செய்வானென்றால், அவனது பாவத்தின் விளைவை அவர்கள் அனுபவிப்பார்கள், ஆனால் அவனது பாவத்தினால் அவர்கள் *குற்றம்* உள்ளவர்களாக *மாட்டார்கள்.*

*2.* ஒரு குழந்தை தனது ஆவியை *யாரிடத்திலிருந்து பெறுகின்றது?* [சக. *12:1*ஐ வாசிக்கவும்.] மனுஷனுக்குள் தேவன் *எதனை உண்டாக்குகின்றார்?* [கோடிட்ட இடத்தில் "ஆன்மா" என்று எழுதி நிரப்பவும்.] *ஆவிகளின் தகப்பன் யார்?* [எபி. *12:9*ஐ வாசிக்கவும்.] தேவன் *ஆவிகளுக்கு என்னவாக இருக்கின்றார்?* [கோடிட்ட இடத்தை "பிதாவாக" என்று எழுதி நிரப்பவும்.]

*நமது ஆவியை நாம் தேவனிடத்திலிருந்து பெறுகின்றோம் என்ற உண்மையானது (பிர. 12:7ஐயும் கவனிக்கவும்), நாம் பாவம் நிறைந்த ஆவியுடன் இவ்வுலகிற்கு வருவதில்லை என்று அர்த்தப்படுத்துகின்றது. ஏனெனில் அவ்வாறு நாம் வந்திருந்தால், தேவன் தீமையின் ஆதார மூலமாய் இருப்பாரல்லவா ஆனால் இது சாத்தியம் அல்ல (யாக். 1:13).*

*3. பரலோக இராஜ்யம் யாருடையதாக உள்ளது?* [*மத். 19:14ஐ வாசிக்கவும்.*] *பரலோக இராஜ்யம் யாரைப் போன்றவர்களுடையதாக உள்ளது?* [*கோடிட்ட இடத்தில் "பிள்ளைகளை" என்று எழுதி நிரப்பவும்.*] *சிறு குழந்தைகள் தீயவர்களாகவும், மோசமானவர்களாகவும் இருக்கின்றார்கள் என்றால், பரலோக இராஜ்யம் அவர்களைப் போன்றுள்ளவர்களுக்கு உரிமையானதாய் உள்ளதென்று எழுதப்பட்டுள்ளதே. ஆனால் சிறுபிள்ளைகள் தூய்மையும் தாழ்மையும் குற்றம் அறியாத் தன்மையும் உள்ளவர்களாய் இருப்பதால் பரலோக இராஜ்யம் அவர்களைப் போன்றவர்களுடையதாய் உள்ளது என்பதே உண்மையாகும். நிச்சயமாகவே பரலோக இராஜ்யம் சிறுபிள்ளைகளைப் போன்று அதாவது தூய்மையும், தாழ்மையும், குற்றமறியாத் தன்மையும் உள்ள மக்களுக்குரியதாகவே இருக்கின்றது.*

[*பாடத்தாளின் பின்புறத்தில் "பிள்ளைகள் பின்வருவனவற்றால் பாவிகளாய் இருக்கின்றார்களா?:*

1. *சொந்த செயல்கள்?* ____________________
2. *சரீரம் மூலமாகப் பெற்றோர்களினால்?* ____________________
3. *ஆவியின் மூலமாக, தேவனால்?* ____________________

*கற்பவர் கோடிட்ட இடங்களை நிரப்பட்டும். இந்தப் பாடத்திலிருந்து அவர் இந்த மூன்று கேள்விகளுக்கு "இல்லை" என்று பதில் அளிக்கக் கற்றிருக்க வேண்டும்.*]

## தொகுப்புரை

[*பாடத்தைத் தொகுத்துரைப்பதில், கற்பவர் சரியாகப் பதில் அளிக்க முடிகின்றதா என்பதைக் காண்பதற்காக ஆசிரியர் முக்கிய தலைப்புகளில் உள்ள கேள்விகளைக் கேட்பதன் மூலம் பாடத்தைத் திருப்பிப் பார்க்கச் செல்வார். ஆசிரியர் கேள்வி கேட்க வேண்டும் மற்றும் மாணவர் அவற்றிற்குப் பதில் அளிக்க வேண்டும்.*] *இப்பாடத்தின் முக்கிய கேள்விகளுக்குப் பதில் அளித்தல் என்பதே இப்பாடத்தைத் தொகுத்துரைப்பதற்கு நமக்குள்ள நல்லதொரு வழியாகும்.*

I. *படைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தவை எவை? "மிக நல்ல வானங்களும் பூமியும்" என்பது சரியான பதிலாக இருக்கின்றது.*

II. *ஏதேன் தோட்டத்தின் நடுவில் இருந்தது என்ன? ஜீவனின் மரமும், நன்மை தீமை அறியும் அறிவைத் தரும் மரமும், இந்த மரத்தின் கனியைப் புசித்தால் அது அவர்களுக்கு இறப்பைக் கொண்டு வரும்.*

III. *ஏதேன் தோட்டத்தில் ஏவாள் எவ்விதம் சோதிக்கப்பட்டாள்? தேவனைக் கேள்வி கேட்கப் பாம்பு அவளை வழி நடத்திற்று, அதனால் அவள் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை உண்டால் சாவு ஏற்படும் என்று அறிந்திருந்தும், அதன் கவர்ச்சிகரமான குணங்களைக்*

கவனித்தாள். அதை அவள் உண்டால் இறந்து போவாள் என்பதைப் பாம்பு மறுத்துரைத்தது, மற்றும் அவர்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போலாவார்கள் என்றும் அது சுட்டிக்காண்பித்தது.

IV. *நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் புசித்ததால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?* பாம்பு தனது வயிற்றினால் நகர்ந்து செல்லும். பெண்ணானவள் பிள்ளையைப் பெறுகையில் மிகுந்த வேதனையை அனுபவிப்பாள் மற்றும் ஆண் அவளை ஆண்டு கொள்ளுவான். பூமியானது சபிக்கப்பட்டிருக்கும். அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு, தேவர்களைப் போல ஆகி நன்மை தீமை அறிந்தார்கள். அவர்கள் பூமிக்குத் திரும்புவார்கள், அதாவது இறந்து போவார்கள்.

V. *பிள்ளைகள் நன்மை தீமை அறிந்தவர்களாய் இவ்வுலகில் பிறக்கின்றார்களா?* பிள்ளைகள் நன்மை தீமை அறியாதவர்களாய் இவ்வுலகில் பிறக்கின்றனர், மற்றும் இந்தக் காரணத்தினால், அவர்கள் பாவமில்லாதவர்களாய் இருக்கின்றனர்.

VI. *பிள்ளைகள் பாவிகளாய்ப் பிறந்து பரலோக இராஜ்யத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளார்களா?* தகப்பனுடைய அக்கிரமத்தை மகன் சுமப்பதில்லை, மனிதனுக்குள் ஆவியை தேவனே உண்டாக்குகின்றார். ஆகையால் ஒரு குழந்தை தூய்மை மற்றும் குற்றமறியாத ஆவியுடன் பிறக்கின்றது. பரலோக இராஜ்யம் சிறு பிள்ளைகளைப் போன்றவர்களுடையதாயுள்ளது.

[ஆசிரியர் மாணவரிடம் பின்வருமாறு கேட்கலாம்: நீங்கள் பச்சிளம் குழந்தையாக இருக்கையில் ஞானஸ்நானப்படுத்தப்பட்டீர்களா? நீங்கள் எதற்காக ஞானஸ்நானப் படுத்தப்பட்டீர்கள் என்பதை அறிவீர்களா? நீங்கள் பிறக்கும் பொழுது ஒரு பாவியாகக் கருதப்பட்டு ஆக்கினைக் குள்ளாக்கப்பட்டீர்களா?

*குழந்தை ஒரு பாவியாகவே பிறக்கின்றது என்பதை நிரூபிக்கப் பயன்படும் வசனப் பகுதியான சங். 51:5ஐ ஆசிரியர் ஆலோசிக்கலாம். இந்த வசனத்தைச் சிலர் நாம் இந்தப் பாடத்தாளில் கற்றுள்ளவற்றுக்கு முரணான வகையில் பிள்ளைகள் பாவிகளாய்ப் பிறக்கின்றனர் என்று நிரூபிக்கப் பயன்படுத்துவார்கள். இதை அவர்கள் NIV மற்றும் NRSV அல்லது இவ்வசனத்தின் தவறான பயன்பாடு போன்றவற்றின் மூலம் செய்கின்றனர். மூலமொழியான எபிரெயத்தில் இவ்வசனம் "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று மட்டுமே உள்ளது.*

*இவ்வசனத்தில் தாவீது தம்மைத் தாழ்த்துவது போல, தாம் பிறந்த தீமையான சூழ்நிலையினால் பாதிக்கப்பட்ட தம் வாழ்வில் இருந்த குறைபாடுகளுக்காகப் புலம்பியது போலக் காணப்படுகின்றது. இது உண்மையென்றால், அவர், "நான் பிறந்த தீமையான சூழ்நிலையினால் நான் பிடிக்கப்பட்டு நான் இருக்கத் தொடங்கிய நாள் முதலாய் அதினால் பாதிக்கப்பட்டேன்" என்று மட்டுமே கூறினார் என்பதாகின்றது.*

*இதை, ஒரு நபர் உலகின் மோசமான குளிர் நிறைந்த பனிப் பகுதி ஒன்றில் இருக்கையில், ஒரு பனி நிறைந்த நாளில், "எனது தாய் ஒரு பனிப் புயலில் என்னைக் கர்ப்பந்தரித்தாள், மற்றும் பனி விழுந்த ஒரு மிகக்*

குளிரான இரவில் நான் பிறந்தேன், இது போன்ற உலகின் பகுதியொன்றில் நான் தங்கியிருப்பதில் வியப்பு எதுவுமில்லை'' என்று கூறுவதற்கு ஒப்பிடப்பட முடியும்.

இப்படிப்பட்ட ஒரு கூற்றானது, அவர் பனிப் புயலில் பிறந்ததால் தாம் ஒரு பனிப்பாறையாகப் பிறந்ததாக எண்ணினார் என்று மறைமுகமாய்க் குறிப்பிடாது. இதே போன்றுதான், துர்க்குணத்தில் உருவாகி, பாவத்தில் கர்ப்பந்தரித்ததாகத் தாவீது கூறிய கூற்றானது அவர் பாவியாய் இருந்தார் என்று கருதியதாக மறைமுகமாய் உணர்த்துவதாகாது. இந்தக் கூற்றானது, தாவீது தம் பிறப்பின் சூழ்நிலைகளைக் கருதிய கூற்றாக இருந்ததேயன்றி, தமது பிறப்பிற்குப் பின் தம் இயல்பைப் பற்றிக் கூறுவதாக இல்லை. அவர் பாவியாகப் பிறந்தார் என்று முடிவெடுத்தல் இவ்வசனத்தினால் மறைமுகமாய் உணர்த்தப்படாத ஒரு முடிவாக உள்ளது.

நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை ஆதாமும் ஏவாளும் உண்பதைத் தேவன் விரும்பாதிருந்தார் என்பதற்குக் காரணமாக தேவன் அவர்களுக்கு வருத்தம், கவலை மற்றும் குற்றம் ஆகிய அம்மரத்தின் விளைவு களைத் தர விரும்பவில்லை என்பதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டலாம். சிலவேளைகளில் தேவன் நமக்குச் சில விஷயங்களைத் தராதிருப்பதை நாம் அவருடைய அற்பத்தனம் என்று நினைக்கலாம், ஆனால் தேவனுடைய தடைகள் யாவும் நமது நன்மைக்கென்றே உள்ளன.

கற்பவர் இந்தப் பாடத்தை புரிந்து கொண்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு, அடுத்த பாடத்திற்கான நேரத்தை ஏற்பாடு செய்யவும்.]